**O.S.No.400/2013**

**Date:11.02.2019**

**வாதி தரப்பு சாட்சி 1 - கோபாலகிருஷ்ணன், த-பெ.மீனாட்சிக் கோன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு பெண் மற்றும் ஒரு சகோதரர் ஆவார்கள். எனக்கு திருமணமாகவில்லை. நான், என் சகோதரர் 2ம் பிரதிவாதி மற்றும் என் தாயார் ஆகியோர் ஒரே குடும்பமாக வசித்துவருகிறோம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் அப்பா பெயர் என்ன என்றால் ஒய்யப்பக்கோனார். தாவாச் சொத்து என் அம்மாவின் தாத்தா ஒய்யப்பக்கோனாருக்குப் பாத்தியப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள நிலையில், அவர் எந்த வழியில் தாத்தா என்றால் என் அம்மாவின் அப்பாவின் தந்தை ஆவார். ஒய்யப்பக்கோனாரின் அப்பா பெயர் தெரியுமா என்றால் நல்லகருப்பக்கோனார் ஆகும். 2ம் பிரதிவாதிக்கும், இந்த ஒய்யப்பக்கோனாருக்கும் என்ன உறவு என்றால் ஒரே பங்காளிகள் ஆவார்கள் தாவாச் சொத்தினைப் பொறுத்து ஏற்பட்ட வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் எவ்வளவு இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஒரு ஆவணத்தில் 25 செண்டு உள்ளது. மற்றொரு ஆவணத்தில் சுமார் 3, 4 ஏக்கர் இருக்கும். வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நான்குமாலுக்கும், தாவாச் சொததின் நான்குமாலுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. என் அம்மாவின் தாத்தா ஒய்யப்பக்கோனாரின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ஒய்யப்பக்கோனாரின் பிள்ளைகள் எத்தனை பேர் என்றால் ஐந்து ஆண் மக்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது அந்த ஐந்து பேரில் எத்தனை பேர் உயிரோடு இருக்கிறார் என்றால் அய்யணக்கோனார் என்ற ஒருவர் மட்டும் உயிரோடு இருக்கிறார். இறந்த நான்கு பேருக்கும் வாரிசுகள் உள்ளனரா என்றால் இருக்கிறார்கள். உயிரோடு உள்ள அய்யணக்கோனார் தாவாச் சொத்து என் அம்மாவுக்கு கொடுக்கப்பட்டது பற்றி நீதிமன்றத்தில் சாட்சி சொல்வாரா என்றால் சொல்லவில்லை. எத்தனை ஊரில் எங்களுக்குச் சொத்துக்கள் உள்ளது என்றால் கிடாரிப்பட்டி மற்றும் வள்ளாலபட்டியில் சொத்துக்கள் உள்ளது. மேலும் கவட்டையம்பட்டியிலும் சொத்துக்கள் உள்ளது. மொத்தம் எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் என் அம்மா வழியில் 150 ஏக்கரும், அப்பா வழியில் 10 ஏக்கரும் இருக்கும். என் அம்மாவுக்கு எந்த காலகட்டத்தில் சொத்தை என் தாத்தா கொடுத்தார் என்றால் 1969ல் திருமணம் நடந்த போது, பெரியோர்களால் சமரசம் பேசி சொத்துக்கள் கொடுக்கப்பட்டது. அந்த பஞ்சாயத்து பேசியவர்கள் தற்போது இருக்கிறார்களா என்றால் என் அம்மாவை கேட்டால் தெரியும். என் அம்மாவை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் இருக்கிறோம். பிராதில் தாவாச் சொத்துக்கள் 569 இனாம் சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா

மாற்றப்படுகிறது.)